யானவை என்று வகைப்படுத்தப்படவில்லை. ஆடுதுறை 27 நெல் வகை "நேர்த்தியானது" என்று வகைப்படுத்தப்பட்டுள்ளது. ஐ.ஆர். 8 நெல் ரகம் நடுத்தரமானது என்று வகைப்படுத்தப்பட்டுள்ளது. மிகு பயன் தரக்கூடிய நெல் வகைகள் அனைத்துக்கும், அவை நேர்த்தி யானவை என்று வகைப்படுத்தப்பட்டிருந்தாலும் சரி, நடுத்தர மானவை என்று வகைப்படுத்தப்பட்டிருந்தாலும் சரி, அவற்றிற்காகக் கொடுக்கப்படும் கொள்முதல் விலைக்குமேல் ரூபாய் 1 ஊக்கத் தொகையாகக் கொடுக்கப்படுகிறது. நேர்த்தியான, நடுத்தரமான, மோட்டா ரக நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்குக் கொடுக்கப்படும் கொள்முதல் விலைகள் முறையே குவிண்டால் ஒன்றுக்கு 51 ரூபாய், 48 ரூபாய், 46 ரூபாய் ஆகும். நெல்லை நேர்த்தியான ரகம், நடுத்தர ரகம், மோட்டா ரகம் என்று வகைப்படுத்துவது, பொதுவாக நெல்லின் நீளம், நீள-அகல வீதாச்சாரம் ஆகியவற்றின் அடிப்படையில் இந்திய அரசின் இசைவு பெற்றுச் செய்யப்படுகிறது.

(5) அரசினர் சட்ட முன்வடிவு.

தமிழ்நாடு 1971-ம் ஆண்டு நகர—நாட்டுப்புற அமைப்பு சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 1/1971).

The Hon. Thiru K. ANBAZHAGAN : Mr. Speaker, Sir, I have the honour to present the Report* of the Joint Select Committee on the Tamil Nadu Town and Country Planning Bill, 1971 (L.A. Bill No. 1 of 1971).

(6) அறிக்கை அளித்தல்.

1967–68-ம் ஆண்டுக்கான தமிழ்நாடு கணக்குகளின் மீதான பொதுக் கணக்காய்வுக் குழுவின் அறிக்கை.

Thiru R. PONNAPPA NADAR : Mr. Speaker, Sir, I rise to present the Report of the Committee on Public Accounts on the Accounts of the State of Tamil Nadu for the year 1967-68.

(7) 1971–72-ம் ஆண்டுக்கான நிதிக்கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு (தொடர்ச்சி).

கோரிக்கை எண் 25—பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல்—"கோரிக்கை எண் 25—பழங்குடி மக்கள், அரிசனங்கள், முதலியோர் நலன் நிதி என்ற தலைப்பின் கீழ் ரூ. 7,00,42,200-க்கு மேற்படாதத் தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்" எனக் கோருகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, மதம் மாறிய அரிசனங்களுக்கும், அரிசனங்களுக்கு அளிக்கும் எல்லாச் சலுகைகளையும் வழங்க வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க :

* Published in the Tamil Nadu Gazette Extraordinary, dated 26th July 1971.

[திரு. ஜே. ஜேம்ஸ்]

[1971 ஜூலை 26

I move—

'That the allotment of Rs. 7,00,42,200 under Demand No. 25—Welfare of the Schedule Tribes, and Castes be reduced by Rs. 100.'

டாக்டர் எச். வி. ஹாண்டே: பேரவைத் தலைவர் அவர்களே, தீண்டாமைக் காரணமாக அரிசனங்களைக் கொடுமைப்படுத்துவோர் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டியது பற்றி விவாதிக்க:

I move—

"That the allotment of Rs. 7,00,42,200 under Demand No. 25—Welfare of the Scheduled Tribes, and Castes be reduced by Rs. 100."

திரு. ஆ. கு. சுப்பையா: பேரவைத் தலைவர் அவர்களே, அரிசனத் தெருக்களுக்கு அரசினர் பொறுப்பில் மின்சார விஸ்தரிப்பு செய்து கொடுப்பது குறித்து விவாதிக்க:

"நிதிக் கோரிக்கை எண் 25—பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன் என்ற தலைப்பில் ஒதுக்கப்படுகின்ற ரூ. 7,00,42,200-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்"
என்கிற என்னுடைய வெட்டுப் பிரேரணையைப் பிரேரேபிக்கிறேன்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: பேரவைத் தலைவர் அவர்களே, அரிசனங்களுக்குத் தொழில் வசதிகளையும், வீட்டு வசதிகளையும் மேம்படுத்த அதிக நிதி ஒதுக்க வேண்டுமென்பது பற்றி விவாதிக்க:

"நிதிக் கோரிக்கை எண் 25—பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன் என்ற தலைப்பில் ஒதுக்கப்படுகின்ற ரூ. 7,00,42,200-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்"
என்கிற என்னுடைய வெட்டுப் பிரேரணையைப் பிரேரேபிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கையும், வெட்டுத் தீர்மானங்களும் விவாதத்திற்கு வருகின்றன. இதில் கலந்து கொண்டு பேச மாண்புமிகு உறுப்பினர்கள் 20 பேர் பெயர் கொடுத்திருக்கிறார்கள். இப்போது மணி $11\frac{3}{4}$ ஆகிறது. இரண்டு மணி நேரம் இருக்கிறது என்று வைத்துக்கொண்டாலும் ஒவ்வொரு உறுப்பினரும் 5 நிமிடங்களுக்கு மேல் போகாமல் தங்களுடைய கருத்துக்களைச் சொல்ல முற்பட்டால் சபை நடவடிக்கைகளைக் குறித்தபடி நடத்தி முடிக்கலாம். ஒதுக்கப்பட்ட தொகுதி உறுப்பினர்கள்—பேசப் பெயர் கொடுத்திருக்கிறவர்கள் அனைவரும் பேச வேண்டியது முக்கியம் என்று கருதுகிறேன்.

திரு. ஆ. கு. சுப்பையா: நிறையப் பேர் பேச வேண்டியிருப்பதால் சபையை மத்தியானமும் வைத்துக்கொள்ளலாம் என்று சொல்ல விரும்புகிறேன்.